# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032

தொலைபேசி 044-22201337

மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in

இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண் 124/மா/2025

நாள் 17.03.2026

அரங்க. பார்த்தீபன்,
விழுப்புரம். --- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர், மண்டலம் 1,
பெருநகர சென்னை மாநகராட்சி. --- எதிர் மனுதாரர்

விழுப்புரம், சரஸ்வதி நகர் அருகில், அரங்கநாதன் அவென்யூ கதவு எண்.1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.அரங்க.பார்த்தீபன் என்பவரின் 20.02.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 24.02.2025 அன்று பெறப்பட்டு 124/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

விழுப்புரம், சரஸ்வதி நகர் அருகில், அரங்கநாதன் அவென்யூ கதவு எண்.1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.அரங்க.பார்த்தீபன் என்பவர் 20.02.2025 நாளிட்ட தனது மனுவில் இணைத்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சி, திருவெற்றியூர் மண்டலம், உதவி ஆணையருக்கு முகவரியிட்ட 30.08.2022 நாளிட்ட மனு மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 1, மண்டல அலுவலருக்கு முகவரியிட்ட 05.01.2023 நாளிட்ட மனு ஆகியவற்றில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:—

### 30.08.2022 நாளிட்ட மனு

"நான், திருவெற்றியூர் நகராட்சியில் 02.09.1994 முதல் 18.07.2002 வரை இளநிலை உதவியாளராகப் பணியாற்றிய காலத்திற்கு எனது மாத ஊதியத்தில் இருந்து வருங்கால வைப்பு நிதி சந்தாத் தொகை பிடித்தம் செய்யப்பட்டது. அச்சந்தாத் தொகைக்கு இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட செயல்முறை ஆணையின்படி வட்டித் தொகையினை எனது வருங்கால வைப்புநிதி கணக்கு எண்ணுக்கு பிரித்து அளிக்கும்படியும், அத்தொகையினை நான் தற்பொழுது பணிபுரியும் நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு அனுப்பும்படியும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்."

### 05.01.2023 நாளிட்ட மனு

"13.12.2017 நாளிட்ட எனது தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுவின் மூலம் திருவொற்றியூர் நகராட்சியில் 1994 முதல் 2002 வரை இளநிலை உதவியாளராக பணியாற்றிய காலத்தில் எனது மாத ஊதியத்தில் வருங்கால வைப்பு நிதிக்காக சந்தா தொகை பிடித்தம் செய்யப்பட்டு அரசின் கருவூலக் கணக்கில் செலுத்தப்பட்டது என்றும், அவ்வாறு செலுத்தப்பட்ட தொகையினை கருவூல கணக்குடன் ஒத்திசைவு செய்து அத்தொகைக்கு ஆண்டு வாரியாக வட்டி வழங்கிடக் கோரி முன்மொழிவு இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை, சென்னை—108 அவர்களுக்கு அனுப்பப்பட்டு,

அம் முன்மொழிவு மீது வழங்கப்பட்ட செயல்முறை ஆணையின் சான்றொப்பம் செய்த நகல் மற்றும் வட்டி அதேபோல் ஆறாவது ஊதியக்குழு நிலுவைக்கு ஆண்டு வாரியாக வட்டி வழங்கிடக் கோரும் முன்மொழிவு மீது இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை, சென்னை–108 அவர்களால் வழங்கப்பட்ட செயல்முறை ஆணையரின் சான்றொப்பம் செய்த நகல் மற்றும் வட்டியினையும் வழங்கிட தகவல் கோரியிருந்தேன்.

19.02.2019 நாளிட்ட மாநில தகவல் ஆணையரின் உத்திரவில் பொது வைப்பு நிதி வட்டித் தொகையான ரூ.17,904/–யை பெறுவது தொடர்பாக மண்டல அலுவலர்–1, மண்டலம்–1, பெருநகர சென்னை மாநகராட்சி, திருவொற்றியூர், சென்னை–19 அவர்களை அணுகி கோரிய தகவல்கள் மட்டுமில்லாமல் கோரிய பரிகாரங்களும் வழங்குவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

எனவே, எனது 13.12.2017ந் தேதியில் கோரிய விவரங்களையும், பொது வருங்கால வைப்பு நிதிக்கான வட்டி ஆறாவது ஊதியக்குழு நிலுவைக்கான வட்டி மேலும் இயக்குநர், உள்ளாட்சி நிதி இயக்குநர், சென்னை–108 அவர்களால் வட்டிக்கான முன்மொழிவு மற்றும் ஒப்புதல் வழங்கப்பட்டிருந்த நிலையில் அவ்வட்டித் தொகையினை நாளது தேதி வரை பிரித்து வழங்கப்படாமல் திருவொற்றியூர் நகராட்சியின் கணக்கிலே இருப்பு வைத்திருந்ததற்கு கூடுதல் வட்டி (Additional interest for the period of non disbursement of PF interest accrued on my PF subscription) வழங்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.''

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 25.04.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1–ன் உதவி ஆணையர் தனது 18.12.2025 நாளிட்ட கடிதம் ம.அ.1 ந.க. எண் பி1/1015/2017–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

> ''பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 1ல் முந்தைய திருவொற்றியூர் நகராட்சியில் பணிபுரிந்த மனுதாரர் திரு. அரங்க பார்த்தீபன், உதவியாளர் கடந்த 02.09.1994 முதல் 18.07.2002 வரை பணியாற்றிய காலத்தில் தனியரின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட வருங்கால வைப்புநிதி சந்தா மீதான வட்டித்தொகை வழங்க கோரியுள்ளார்.
>
> மேற்படி பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1 ஆனது கடந்த 25.10.2011 முதல் முந்தைய திருவொற்றியூர் நகராட்சி மற்றும் கத்திவாக்கம் நகராட்சியுடன் இணைக்கப்பட்டதால், அன்றைய கால கட்டத்தில் சில ஆவணங்கள் அன்றைய நகராட்சி பணியாளர்களால் ஒப்படைக்கப்பட்டது. இதில் வருங்கால வைப்பு நிதி பதிவேடுகள் மற்றும் இதர ஆவணங்கள் முறையாக ஒப்படைக்கப்படாததால் மேற்படி மனுதாரருக்கு முறையாக பதில் அளிக்க இயலவில்லை. தற்போது மேற்கண்ட ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் இம்மண்டலம் 1ல் உள்ள பணியாளர்களை கொண்டு தேடப்பட்டதில் சில ஆவணங்கள் கிடைக்கப் பெற்றன. அதில் மனுதாரர் குறிப்பிட்ட வருங்கால வைப்பு நிதி சந்தா மீதான வட்டித்தொகை கணக்கீடு பதிவேடு கிடைக்கப் பெற்றதில், மனுதாரரின் கோரிக்கையின்படி தற்போது தனியருக்கு வழங்க வேண்டிய வருங்கால வைப்புநிதி சந்தா மீதான வட்டி தொகை ரூ.17,904/– இருப்பில் உள்ளதால் அதனை முறையாக இம்மண்டல முதுநிலை கணக்கு அலுவலர் அவர்களின் கருத்துரு பெற்று தொகையினை விடுவிக்க மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால் ஒரிரு வாரங்களில் தனியருக்கு தொகை வழங்கப்பட்டு அதற்கான விவரத்தினை தங்களுக்கு தெரிவிக்கப்படும் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 20.02.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 03.02.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. இந்நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1–ன் உதவி ஆணையர் தனது 19.02.2026 நாளிட்ட கடிதம் ம.அ.1 ந.க. எண் பி1/1015/2017–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார். அதில்–

"தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் அவர்களின் முறையீட்டு மனுவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1–ல் முந்தைய திருவொற்றியூர் நகராட்சியில் பணிபுரிந்த மனுதாரர் திரு. அரங்க பார்த்தீபன், உதவியாளர் கடந்த 02.09.1994 முதல் 18.07.2002 வரை பணியாற்றிய காலத்தில் தனியரின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட வருங்கால வைப்பு நிதி சந்தா வட்டித் தொகை வழங்க கோரியுள்ளார்.

இவ்வலுவலக முதுநிலை கணக்கு அலுவலர்/ம.1 (பொ) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–1 அவர்களின் குறிப்பின்படி திரு. அரங்க பார்த்தீபன், உதவியாளர் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–1 முந்தைய திருவொற்றியூர் நகராட்சியில் 02.09.1994 முதல் 18.07.2002 வரை பணியாற்றிய காலத்திற்கு தனியரின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட வருங்கால வைப்புநிதி சந்தா தொகைக்கான வட்டித் தொகை ரூ.17,904/–ஐ தனியருக்கு வழங்க கோரப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 1 அலுவலக வங்கி கொடுப்புச் சீட்டு எண் 4/BPV/00006859/02/2025–26, நாள் 19.02.2026–ன் வங்கி கொடுப்புச் சீட்டு மூலம் (Bank Payment Voucher) தற்போது பெறப்பட்டது. திரு. அரங்க பார்த்தீபன், முன்னாள் உதவியாளர் திருவொற்றியூர் நகராட்சி அவர்களின் வங்கி கணக்கிற்கு (RTGS/NEFT) வழங்கப்பட்டது. அதற்கான ஆவணங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6. மனுதாரர் 20.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"நான், திருவெற்றியூர் நகராட்சியில் 02.09.1994 முதல் 18.07.2002 வரை இளநிலை உதவியாளராகப் பணியாற்றிய காலத்திற்கு எனது மாத ஊதியத்தில் இருந்து வருங்கால வைப்பு நிதி சந்தாத் தொகை பிடித்தம் செய்யப்பட்டது.

எனவே, பொது வருங்கால வைப்பு நிதிக்கான வட்டி ஆறாவது ஊதியக்குழு நிலுவைக்கான வட்டி ஆகியவை இயக்குநர், உள்ளாட்சி நிதி இயக்குநர், சென்னை–108 அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்டிருந்த நிலையில் அதற்கான வட்டித் தொகையான ரூ.17,904/– 2002 ஆண்டிற்கு உரியது மட்டும் வழங்கப்பட்டுவிட்டது. ஆனால் திருவொற்றியூர் நகராட்சியின் கணக்கிலே மேற்காணும் தொகை ரூ.17,904/–ஐ 23 ஆண்டுகளுக்கு மேலாக இருப்பு வைத்ததற்கு கூடுதல் வட்டி தமிழ்நாடு பொது வருங்கால வைப்பு நிதி விதி 14, 15 மற்றும் 33ன்படியும், அரசாணை எண். 315 நிதி (படிகள்) துறையின்படியும் (Additional interest for the period of non disbursement of PF interest accrued on my PF subscription) நாளது தேதி வரை வழங்கும்படி பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1–ன் மண்டல அலுவலருக்கு உத்திரவிடுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்."

7. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1–ன் கண்காணிப்பாளர்கள் 20.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

“பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 1–ல் முந்தைய திருவொற்றியூர் நகராட்சியில் பணிபுரிந்த திரு. அரங்க பார்த்தீபன், உதவியாளர் கடந்த 02.09.1994 முதல் 18.07.2002 வரை பணியாற்றிய காலத்தில் தனியரின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட வருங்கால வைப்புநிதி சந்தா மீதான வட்டித்தொகை வழங்க கோரியுள்ளார்.

மேற்படி பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1 ஆனது கடந்த 25.10.2011 முதல் முந்தைய திருவொற்றியூர் நகராட்சி மற்றும் கத்திவாக்கம் நகராட்சியுடன் இணைக்கப்பட்டதால், வருங்கால வைப்பு நிதி பதிவேடுகள் மற்றும் இதர ஆவணங்கள் முறையாக ஒப்படைக்கப்படாததால் மேற்படி மனுதாரருக்கு முறையாக பதில் அளிக்க இயலவில்லை. தற்போது மேற்கண்ட ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் இம்மண்டலம் 1ல் உள்ள பணியாளர்களை கொண்டு தேடப்பட்டதில் சில ஆவணங்கள் கிடைக்கப் பெற்றன. அதில் மனுதாரர் குறிப்பிட்ட வருங்கால வைப்பு நிதி சந்தா மீதான வட்டித்தொகை கணக்கீடு பதிவேடு கிடைக்கப் பெற்றதில், மனுதாரரின் கோரிக்கையின்படி தற்போது தனியருக்கு வழங்க வேண்டிய வருங்கால வைப்புநிதி சந்தா மீதான வட்டி தொகை ரூ.17,904/– மனுதாரருக்கு 19.02.2026 அன்று வழங்கப்பட்டுவிட்டது.

மனுதாரர் கோரிய வருங்கால வைப்பு நிதி தொகைக்கான வட்டிக்கு வட்டி (தற்போது வட்டி விடுவிக்கப்பட்ட ஆண்டு முதல் இன்று வரை) கோரியிருப்பது குறித்து விதிகளுக்கு உட்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.”

8. மனுதாரரின் மனுக்கள், வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1–ன் உதவி ஆணையரின் அறிக்கைகள் மற்றும் கண்காணிப்பாளர்களின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

மனுதாரர் திருவெற்றியூர் நகராட்சியில் 02.09.1994 முதல் 18.07.2002 வரை இளநிலை உதவியாளராகப் பணியாற்றிய காலத்திற்கு தனது மாத ஊதியத்தில் இருந்து பிடிக்கப்பட்ட வருங்கால வைப்பு நிதிக்கான வட்டி மற்றும் ஆறாவது ஊதியக்குழு நிலுவைக்கான வட்டி ஆகியவை உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை இயக்குநரால் ஒப்புதல் வழங்கப்பட்டிருந்த நிலையில் அதற்கான வட்டித் தொகையான ரூ.17,904/–ஐ 2002 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு வழங்கப்பட்டுவிட்டது என்பதும், திருவொற்றியூர் நகராட்சியின் கணக்கிலே மேற்காணும் தொகை ரூ.17,904/–ஐ 23 ஆண்டுகளுக்கு மேலாக இருப்பு வைத்ததற்கு கூடுதல் வட்டியினை தமிழ்நாடு பொது வருங்கால வைப்பு நிதி விதி 14, 15 மற்றும் 33ன்படியும், அரசாணை எண். 315 நிதி (படிகள்) துறையின்படியும் (Additional interest for the period of non disbursement of PF interest accrued on my PF subscription) நாளது தேதி வரை வழங்கும்படி பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1–ன் மண்டல அலுவலருக்கு உத்திரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனுக்கள் மற்றும் வாக்குமூலம் ஆகியவை வாயிலாக அறிய முடிகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1 ஆனது கடந்த 25.10.2011 முதல் முந்தைய திருவொற்றியூர் நகராட்சி மற்றும் கத்திவாக்கம் நகராட்சியுடன் இணைக்கப்பட்டதால், வருங்கால வைப்பு நிதி பதிவேடுகள் மற்றும் இதர ஆவணங்கள் முறையாக ஒப்படைக்கப்படாததால், தற்போது தேடப்பட்டதில் கிடைக்கப் பெற்று மனுதாரரது வருங்கால வைப்பு நிதி சந்தா மீதான வட்டித்தொகை கணக்கீடு பதிவேட்டின் அடிப்படையில் மனுதாரர் 02.09.1994 முதல் 18.07.2002 வரை பணியாற்றிய காலத்தில் பிடிக்கப்பட்ட வருங்கால வைப்புநிதி சந்தா மீதான வட்டி தொகை ரூ.17,904/–ஐ அன்னாருக்கு 19.02.2026 அன்று வழங்கப்பட்டுவிட்டது என்பதும், மனுதாரர் மேற்கண்ட வருங்கால வைப்பு நிதி தொகைக்கான வட்டிக்கு வட்டி (தற்போது வட்டி விடுவிக்கப்பட்ட ஆண்டு முதல் இன்று வரை) கோரியிருப்பது குறித்து விதிகளுக்கு உட்பட்டு பெருநகர

சென்னை மாநகராட்சி ஆணையரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1–ன் உதவி ஆணையரின் அறிக்கைகள் மற்றும் கண்காணிப்பாளர்களின் வாக்குமூலம் ஆகியவை வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் 02.09.1994 முதல் 18.07.2002 வரை முந்தைய திருவொற்றியூர் நகராட்சியில் பணியாற்றிய காலத்தில் பிடிக்கப்பட்ட வருங்கால வைப்புநிதி சந்தா மீதான வட்டி தொகை 2002 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு வழங்கப்பட்டுவிட்டது என்றாலும், மேற்காணும் தொகை ரூ.17,904/–ஐ 23 ஆண்டுகளுக்கு மேலாக திருவொற்றியூர் நகராட்சியில் இருப்பு வைத்ததற்கு கூடுதல் வட்டியினை தமிழ்நாடு பொது வருங்கால வைப்பு நிதி விதி 14, 15 மற்றும் 33ன்படியும், அரசாணை எண். 315 நிதி (படிகள்) துறையின்படியும் (Additional interest for the period of non disbursement of PF interest accrued on my PF subscription) நாளது தேதி வரை வழங்கும்படி கோரியுள்ளதற்கு, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1–ன் கண்காணிப்பாளர்கள் தங்களுடைய வாக்குமூலத்தில், விதிகளுக்கு உட்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்ததற்கிணங்க, உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1–ன் மண்டல அலுவலருக்கு அறிவுறுத்துமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. அரங்க.பார்த்தீபன்,
கதவு எண்.1, அரங்கநாதன் அவென்யூ,
சரஸ்வதி நகர் அருகில், விழுப்புரம்–605 602.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003

(3) மண்டல அலுவலர், மண்டலம் 1,
பெருநகர சென்னை மாநகராட்சி
திருவொற்றியூர், சென்னை 600 019.

(4) கண்காணிப்பாளர்/ ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

20/3/26
செயலாளர்.

20/3/26